**தேசிய மாணிக்கக் கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையின் - 2010**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய தேசிய மாணிக்கக் கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி தேசிய மாணிக்கக் கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையின் நிதி நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்ராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

ஐந்தொகையில் கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ‘‘இல்லம’’ காப்புறுதி நிதியத்திலும் ஒப்பந்தகாரர்களினது கணக்கிலும் நிலவிய முறையே ரூபா 4,212,623 மற்றும் ரூபா 6,126,285 மீதிகள் மீளாய்வாண்டிற்கான வருமானத்திற்கு உள்வாங்கப்பட்டிருந்தது. இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 03 இன் பிரகாரம் இது வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இரத்திணபுரி புதிய கட்டிடத் தொகுதியில் கடைகளை வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கியமையால் பெறப்படவேண்டிய ரூபா 3,187,000 கணக்குளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளிற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள சிட்டைகளின் படி அவ் ஆண்டுகளிற்காக செலுத்தப்படாத கணக்காய்வுக்

கட்டணங்களின் மொத்தம் ரூபா 1,416,620 ஆன போதிலும் அட்டுறு கணக்காய்வுக் கட்டணமாக ரூபா 2,441,077 காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) அரசுடமையாக்கப்பட்ட பிணைப்பணக் கணக்கு ரூபா 100,000 ஆல் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மேம்படுத்தல் விடயமொன்றாக 2010 திசெம்பர் மாதத்தில் பெற்றுக் கொண்டிருந்த 14 ஆபரணப் பெட்டிகளிற்காக செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 357,500 தொகை மீளாய்வாண்டின் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலத்தவேண்டிய கணக்குகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடன்பட்டோர் மீதியில் காணப்படுகின்ற ரூபா 163,949 ஆன திருப்பி அனுப்பப் பட்டிருந்த காசோலைகளில் ரூபா 29,436 பெறுமதியான 6 காசோலைகள் 3 தொடக்கம் 8 ஆண்டுகள் வரையான காலத்திலிருந்து நிலவிவந்திருந்ததுடன் ரூபா 64,114 பெறுமதியான 8 காசோலைகள் 01 தொடக்கம் 3 ஆண்டுகள் வரையான காலத்திலிருந்து நிலவிவந்திருந்தது.

(ஆ) மாணிக்கக் கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 9,786,537 தொகையில் 5 வருடங்களிற்கும் மேல் பழமைவாய்ந்த ரூபா 4,898,232 மீதியொன்றும் காணப்பட்டதுடன் 2 தொடக்கம் 5 ஆண்டுகள் வரை பழமை வாய்ந்த மீதி ரூபா 4,521,304 ஆகும்.

(இ) சில்லறைக் கடன்பட்டோர் மீதியினுள் உள்ளடங்கியுள்ள ரூபா 57,407 இடர் கடன் தொகையும் பெலிதெனிய கட்டிடத்திலிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 20,500 வாடகையும் ரூபா 9,025 ஆராய்ச்சித் தொகையும் அடங்கலாக மொத்தம் ரூபா 86,932 தொகை 8 வருடங்களைத் தாண்டியிருந்த போதிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை..

(ஈ) மீளாய்வாண்டிலும் முன்னைய இரு ஆண்டுகளிலும் உலக வர்த்தக மையத்தில் தாபிக்கப்பட்டிருந்த வியாபாரத் தளங்களை வாடகைக்கு வழங்கியமையால் மொத்தமாக ரூபா 4,975,285 தொகையினை உப குத்தகைக் காரர்களிடமிருந்து அதிகாரசபை அறவிட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 3,515,043 மொத்தமான 4 கடன்கொடுத்தோர் மீதிகள் 5 ஆண்டுகளிற்கும் மேலாக நிலவி வந்திருந்ததுடன் அவற்றை தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டிலேனும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

ரூபா 185,000 பிணைப் பணத்தினை மீளளித்தமைக்கான பண வைப்புப் பற்றுச்சீட்டு மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம், ரூபா 20,000 புகைப்படக் கட்டணத்தினை செலுத்தியமைக்கான புகைப்படப் புத்தகம் மற்றும் சீடீக்கள், ரூபா 3,094,808 ஆன வீடமைப்புக் கடன் திட்டம் தொடர்பில் அதிகாரசபைக்கும் அரச அடைமான முதலீட்டு வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை, வர்த்தகக் கண்காட்சிக்காக தொலைக்காட்சி மற்றும் பத்திரிகை விளம்பரங்களை பிரசுரிப்பதற்காக செய்யப்பட்டிருந்த ரூபா 1,965,330 செலவினத்திற்குரிய கோவை மற்றும் ரூபா 232,100,125 ஆன நிலையான சொத்துக்கள் தொடர்பிலான மெய்மையாய்வுச் சபை அறிக்கை போன்றன இன்மை காரணமாக அவற்றை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க நல்லாட்சி மீதான சுற்றறிக்கையின் 5.2.1 மற்றும் 5.2.5 ஆம் பிரிவுகள் | வருடாந்த பாதீட்டினைத் தயாரிக்கையில் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றை உள்ளடக்க வேண்டும் என்றும் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பாதீடு தொடர்புடைய அமைச்சு, திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 2010 ஆம் ஆண்டுக்கான பாதீடு தொடர்பில் அதன் படி செயற்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1995 நொவம்பர் 20 ஆந் திகதிய 105 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை | மானியங்கள் மற்றும் அன்பளிப்புப் பொருட்களிற்காக முன்னைய ஆண்டின் வரிக்கு பின்னரான இலாபத்தில் 1% வரை அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மீது செலவிடப்பட முடியுமென குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் முன்னைய ஆண்டில் நட்டம் ஏற்பட்டிருக்கையிலும் அங்கீகாரமின்றி ரூபா 2,036,464 ஆன சின்னங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (இ) | 2009 நொவம்பர் 20 ஆந் திகதிய 440 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை மற்றும் பெறுகைகள் வழிகாட்டல்கள் கையேடு | அதிகாரசபையினால் ஞாபகச் சின்னங்கள், நகைப் பெட்டிகள் மற்றும் மாணிக்கக் கற்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,061,350 செலவிடப்பட்டிருந்ததுடன் இக் கொள்வனவுகளிற்காக திணைக்களக் கொள்வனவுச் சபையொன்றினதும் மதிப்பீட்டுச் சபையொன்றினதும் பரிந்துரைகள் தேவையான போதிலும் அதற்கு முரணாக பகிரங்க விலைகோரலுமின்றி கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அமைச்சின் தேவைகளிற்காக இக் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டதாக 2011 மே 13 ஆந் திகதி தலைவரினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2008 ஜுலை 28 ஆந் திகதிய பீஈடி/40 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றிக்கை | 2010 மே, ஜுன், ஜுலை மாதங்களிற்காக 05 உத்தியோகபூர்வ வாகனங்களிற்கு அங்கீகரித்த எல்லையினை மீறி 1505.99 லீற்றர் எரிபொருளிற்காக ரூபா 165,079 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் முறையான அங்கீகாரமொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (உ) | பெறுகைகள் வழிகாட்டல்கள் கையேடு | |
| | (i) 2.14.1 ஆம் பந்தி | சர்வதேச தரத்திலமைந்த வர்த்தக கண்காட்சிக்காக கண்காட்சிப் பதாகைகளைப் பொருத்துவதற்காக ரூபா 2,355,074 இனை செலவிடுகையில் கொள்வனவுச் சபைக்கு குறித்த விடயம் தொடர்பில் அறிவு படைத்த உத்தயோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. இது ஜுவெல்ஸ் சிறீ லங்கா ஒழுங்கமைப்புச் சபையினால் திட்டமிட்டு அங்கீகரிக்கப்பட்டதாக 2011 மே 13 ஆந் திகதி தலைவரினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. |
| | (ii) 6.2.2 ஆம் பந்தி | (அ) வர்த்தகக் கண்காட்சிப் பணிகளை முகாமைத்துவம் செய்வதற்காக நிறுவனமொன்றைத் தேர்ந்தெடுப்பதற்கு பகிரங்க விலைகோரல்களை மேற்கொள்கையில் விலை மனுக்களைச் சமர்ப்பிப்பதற்காக குறைந்த பட்சம் 21 நாள் கால |

அவகாசம் வழங்கப்பட வேண்டிய போதிலும் 03 நாள் கொண்ட குறுகிய கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) மேற்படி பணிகளிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைமனுக்களில் ரூபா 6,739,500 ஆகிய (வரி நீங்கலாக) குறைந்த விலை மனுவிலும் ஏறத்தாழ இரண்டு மடங்கு அதிகமான ரூபா 12,381,500 ஆகிய (வரி நீங்கலாக) விலையினை தேர்ந்தெடுப்பதற்கு அடிப்படையாக அமைந்திருந்த காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை

| | |
|---|---|
| (iii) 5.4.4 (i) ஆம் பந்தி | 20% மாத்திரமே முற்பணமாக வழங்கப்பட முடியுமாயினும் வர்த்தகக் கண்காட்சிக்காக முகாமைத்துவப் பணிகளைப் பெற்றுக்கொள்கையில் இரண்டு சந்தர்ப்பங்களில் 30% ஆக முற்பணங்களைச் செலுத்துவதற்கு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்ததுடன் மொத்தப் பெறுமதியில் 43% ஆகிய ரூபா 6,079,587 அதற்காக செலுத்தப்பட்டிருந்தது. |
| (iv) 4.3.1 (இ) ஆம் பிரிவு | மொத்த மதிப்பீட்டுக் கிரயத்தில் 10% ஆன அளவிற்கு மாத்திரமே அவசர எதிர்பாராத சந்தர்ப்பங்களிற்காக இடமளிக்க முடியுமாயினும் வர்த்தகக் கண்காட்சியின் மொத்தக் கிரயத்தில் 49% வரை மேலதிகச் செலவினங்களிற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 4,862,500 ஆகிய மொத்தக் கிரயத்தில் 39% ஆன அளவு செலுத்தப்பட்டிருந்தது. |
| (v) 5.4.8 ஆம் பிரிவு | ஒப்பந்தவேலை அல்லது பணிகளின் மொத்தக் கிரயத்தில் 5மூ இற்கு குறையாத அளவிற்கு செயலாற்றல் பிணையொன்றினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் வர்த்தகக் கண்காட்சிக்கான முகாமைத்துவப் பணிகளிற்காக அதன் படி பிணையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு

#### 2.1.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான அதிகாரசபையின் நிதி விளைவுகள் வரிக்கு முன்னர் ரூபா 32,966,486 தேறிய நட்டமொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறிய நட்டம் ரூபா 11,498,187 ஆகும். காணிகளை ஏலமிடல் வருமானம் ரூபா 31,401,598 ஆல் குறைவடைந்திருந்தமை, நிர்வாக செலவினம் ரூபா 15,458,117 ஆலும் மேம்படுத்தல் செலவினம் ரூபா 15,764,568 ஆலும் அதிகரித்திருந்தமை தேறிய நட்டம் அதிகரிப்பதற்கு முக்கியமாக செல்வாக்கு செலுத்தியிருந்தன.

#### 2.1.1 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரு ஆண்டுகளில் அதிகாரசபையின் நிதி விளைவுகளினது வரிக்கு முன்னரான நிலைமை பின்வருமாறு காணப்பட்டது.

| வருடம் | இலாபம்/(நட்டம்) |
|---|---|
| | ரூபா |
| 2008 | 29,407,730 |
| 2009 | (11,498,187) |
| 2010 | (32,966,486) |

இதன் படி 2009 ஆம் ஆண்டில் 40 மில்லியனாலும் 2010 ஆம் ஆண்டில் 21 ஆலும் அதிகாரசபையின் நிதி வளைவுகள் பின்னடைவுற்றிருந்தமை அவதாக்கப்பட்டதுடன் இலாபத்தினை அதிகரிப்பதற்கு/நட்டத்தினைக் குறைப்பதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

#### 2.2.1 செயலாற்றுகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல்

மாணிக்கக் கல் தொழிலிற்காக அதிகார சபையின் பிராந்திய அலகுகள் மற்றும் கொழும்பில் அமைந்துள்ள அலுவலகங்களினால் விநியோகிக்கப்பட்ட

அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை மீளாய்வாண்டின் மதிப்பீட்டு இலக்கினை அடைதல் விகிதாசாரமானது மாணிக்கக் கல் அகழ்வு அனுமதிப்பத்திரம் 67% ஆகவும் வர்த்தக அனுமதிப்பத்திரம் 60% ஆகவும் மாணிக்கக் கல் ஏலமிடல் அனுமதிப்பத்திர விநியோகம் 37% ஆகவும் காணப்பட்டன.

**(ஆ) நியதிச் சட்ட செயற்பாடுகளிலிருந்தான வருமானங்கள்**

முன்னைய 2 ஆண்டுகளினதும் மீளாய்வாண்டினதும் நியதிச் சட்ட செயற்பாடுகளிலிருந்தான வருமானங்கள் பின்வருமாறு காணப்பட்டன.

| | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| காணிகளை ஏலமிடல் - அரசாங்கக் காணிகள் | 0.4 | 40.6 | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மற்றும் பெருந்தோட்டக் கம்பனிகள் | 54.5 | 8.2 | 17.5 |
| மாணிக்கக்கல் அகழ்வு அனுமதிப்பத்திரம் | 8.5 | 7.7 | 19.1 |
| வியாபார அனுமதிப்பத்திரம் | 21.3 | 18.6 | 20.7 |
| ஏற்றுமதிகள் மீதான தரகுப்பணம் | 62.7 | 42.4 | 47.3 |
| மாணிக்கக்கல் பட்டைதீட்டல் அனுமதிப்பத்திரம் | 0.3 | 0.2 | 0.2 |
| கெவுடா ஏற்றுமதித் தரகுப்பணம | 7.54 | 5.8 | 5.5 |
| | 1.7 | 2.4 | 2.8 |
| | 156.9 | 125.9 | 113.1 |

இதன் படி,

(i) 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நியதிச்சட்ட செயற்பாடுகளிலிருந்தான வருமானங்கள் 28% இனால் குறைவடைந்திருந்தன.

(ii) மீளாய்வாண்டில் தேடுதல்களிற்காக ரூபா 1,469,836 செவிடப்பட்டிருக்கையிலும் மானிக்கக்கல் அகழ்வு மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் 50% இனால் அதிகரிக்கப்பட்டிருக்கையிலும் மீளாய்வாண்டில் நியதிச்சட்ட செயற்பாடுகளிலிருந்தான வருமானங்கள் குறிப்பிடத்தக்க அளவில் குறைவடைந்திருந்தன.

(iii) மீளாய்வாண்டில் 888 அரசாங்கக் காணி ஏலமிடல்கள் மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கும் பெருந்தோட்டக் கம்பனிகளிற்கும் சொந்தமான காணி ஏலமிடல்களை நடாத்துவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 112 ஆகிய 12% அளவான காணிகள் மாத்திரமே ஏலமிடப்பட்டிருந்தன.

## (இ) மானிக்கக்கற்கள் மற்றும் தங்க ஆபரண ஏற்றுமதிகள்

முன்னைய 4 வருடங்களுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதிகள் மீதான நிலைமை பின்வருமாறு காணப்பட்டன.

**ரூபா மில்லியன்**

| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|
| மானிக்கக்கல் ஏற்றுமதிகள் | 9,853 | 10,444 | 8,281 | 7,226 | 7,488 |
| தங்க ஆபரண ஏற்றுமதிகள் | 1,751 | 2,076 | 1,728 | 1,523 | 1,490 |
| மொத்தம் | 11,604 | 12,520 | 10,009 | 8,749 | 8,978 |
| ஏற்றுமதி மேம்படுத்தல் செலவினம் (உள்நாடு/வெளிநாடு) | 17 | 42 | 35 | 33 | 49 |
| ஏற்றுமதி அதிகரிப்பு விகிதாசாரம் | | 7% | (25%) | (14%) | 3% |

(முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு)

(i) 2007 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மானிக்க ஏற்றுமதிகள் 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் முறையே 21%, 31%, மற்றும் 28% இனால் குறைவுற்றிருந்தன.

(ii) 2007 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தங்க ஆபரண ஏற்றுமதிகள் 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் முறையே 16.76%, 26.63%, மற்றும் 28.22% இனால் குறைவடைந்திருந்தன.

(iii) ஏற்றுமதி மேம்படுத்தல் கிரயத்துடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதிகளில் அதிகரிப்பொன்று காண்பிக்கப்படவில்லை.

**(ஈ) வெளிநாட்டு வர்த்தகக் கண்காட்சி – 2010**

(i) 2010 ஆம் ஆண்டின் ஏற்றுமதி மேம்படுத்தல் திட்டத்தின் படி பங்குபற்றுவதற்கு தீர்மானமாகியிருந்த 9 வெளிநாட்டு வர்த்தகக் கண்காட்சிகளில் 5 இல் மாத்திரமே பங்குபற்றப்பட்டிருந்தது.

(ii) 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டிருந்த வெளிநாட்டு வர்த்தகக் கண்காட்சிக்காக மதிப்பீட்டினை மீறி செலவுகள் செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் வருமாறு

| வர்த்தகக் கண்காட்சிகள் | மதிப்பிடப்பட்ட செலவினம் | உள்ளபடியான செலவினம் | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| ஜுவலர் செங்கய் கண்காட்சி | 1,887,356 | 4,866,539 | 2,979,183 |
| வைய்னா இன்டர்நேஷனல் கோல்ட் ஜுவல்ரி என்ட் ஜெம் பெயா | 1,040,331 | 2,749,475 | 1,709,144 |
| சிங்கப்பூர் சர்வதேச ஜுவல்ரி கண்காட்சி | 1,579,993 | 2,024,473 | 444,480 |
| சீன சர்வதேச ஆபரணக் கண்காட்சி (பீஜிங்) | 2,119,413 | 5,092,353 | 2,972,940 |

(உ) மீளாய்வாண்டில் 1155 தேடுதல் பணிகளை மேற்கொள்வதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் 584 தேடுதல் பணிகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் மூலம் கிடைத்திருந்த வருமானம் ரூபா 11,554,417 ஆகும்.

### 2.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிலங்களைத் தோன்றுதல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவின் பணிகளிற்காக கெப் வாகனமொன்றின் தேவைப்பாட்டினைக் காண்பித்து ரூபா 9,700,000 இற்கு கெப் வாகனமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இதனை அப் பணிகளிற்கு பயன்படுத்தாது செயற்பாட்டுப் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ வாகனமாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தரப்படுத்தல் இரசாயண ஆய்வுகூடமொன்றை தாபிப்பதற்காக 2001 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டு வரை ஏற்றுமதி வருமானத்தில் அறவிடப்பட்டிருந்த ரூபா 99,545,573 தொகையிலிருந்து நிதியமொன்று தாபிக்கப்பட்டிருந்தது. இந் நதியத்திலிருந்து ரூபா 7,046,995 தொகையொன்று தரச் சான்றிதழ்களை விநியோகிக்கும் வசதிகளை வழங்குவதற்காக இணக்கம் காணப்பட்டிருந்த அமெரிக்கன் மெனிக் வர்த்தகக் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் எப்பிரதிபலனும் கிடைத்திருக்கவில்லை. ஆய்வுகூடத்தினை நிர்மாணிப்பதற்காக 2009 ஏப்ரல் வரை தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன் 2009 ஏப்ரல் மாதத்தில் அந் நிதியத்தில் எஞ்சியிருந்த ரூபா 92,498,578 தொகை அமைச்சரவை அங்கீகாரத்தின் மீது தனியார் நிறுவனமொன்றுக்கு அப் பணியினை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அதிகாரசபையினால் அக் கம்பனியின் இரண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்காக ரூபா 26,208 செலவில் பத்திரிகை விளம்பரமொன்று செய்யப்பட்டிருந்தது.

(இ) வர்த்தகக் கண்காட்சிக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,760,000 பெறுமதியான Name Board, Special Gem display area, Information desk with tow spot light, entrance branding, display structure box போன்ற விடயங்கள் வர்த்தக கணக்காட்சி முடிவுற்று 5 மாதங்கள் கடந்திருந்த போதிலும் அதிகாரசபை வளவில் காணப்படாதிருந்ததுடன் இச் சொத்துக்கள் தனியார் இடமொன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாக எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. இச் சொத்துக்கள் அதிகாரசபையின் சொத்துக்கள் பதிவேட்டிற்கும் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1998 ஜனவரி 01 ஆந் திகதி தொடக்கம் "இல்லம" என்ற பெயரில் மானிக்கக்கல் சுரங்கத் தொழிலாளர்களிற்கான சமூகக் காப்புறுதித் திட்டமொன்றிற்காக வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இக்

காப்புறுதித் திட்டத்திற்காக மானிக்கக்கல் சுரங்கத் தொழிலாளர்களிடமிருந்து ஆண்டுக்கு ரூபா 120 வீதம் தவணைப்பணம் அறவிடப்பட்டிருந்தது. 2000 ஆம் ஆண்டு தொடக்கம் இக் காப்புறுதித் திட்டம் செயலிழந்திருந்ததுடன் 2010 ஆம் ஆண்டில் பனிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கமைய இக் கணக்கின் மீதியினை சில்லறை வருமானங்கள் கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 திசெம்பர் 31 இல் மருத்துவ உதவித் திட்டத்திற்கான நிறுவனத்தின் உதவுதொகை ரூபா 4,000,000 ஆனதுடன் உத்தியோகத்தர்களின் உதவுதொகை ரூபா 236,550 ஆக காணப்பட்டது. இதன் படி மருத்துவ உதவிக்கான மொத்தத் தொகையில் உத்தியோகத்தர்களின் உதவுதொகை 6% ஆனதுடன் நிறுவனத்தின் உதவுதொகை 94% ஆன உயர்ந்த பெறுமதியொன்றைக் கொண்டிருந்தது. ஆண்டில் மருத்துவ உதவிச் செலுத்துகைகள் மொத்த உதவுதொகையில் 99.9% ஆக காணப்பட்டது.

(ஆ) அதிகாரசபைக்கும் அரச ஈட்டு முதலீட்டு வங்கிக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் படி வீடமைப்புக் கடன் திட்மொன்று செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் வீடமைப்புக் கடன்களைப் பெற்றுக் கொண்டிருந்த உத்தியோகத்தர்களினால் 2010 திசெம்பர் 31 இல் சகல கடன்களும் தீர்க்கப்பட்டிருந்தன. அவ்வாறாயினும் அரச ஈட்டு முதலீட்டு வங்கியிடமிருந்து ரூபா 3,094,808 தொகையொன்று அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டியிருந்ததுடன் இத் தொகைக்காக 5% இற்கு கிட்டிய அளவில் வட்டித் தொகையொன்று அதிகாரசபைக்குக் கிடைப்பதுடன் இத் தொகையினை தீர்வுசெய்து வேறு பயனுள்ள அல்லது பொருளாதாரப் பணியொன்றிற்காக பயன்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 பயனற்ற செலவினங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்க தகவல் திணைக்களத்தின் வேண்டுகோளிற்கமைய ‘‘நிதகச’’ கலாச்சார விழாவில் மானிக்கக் கல் ஒன்றின் மாதிரியில் தயாரிக்கப்பட்டிருந்த கண்காட்சிக் கூடத்தினை நிர்மாணிப்பதற்காக ரூபா 6.5 மில்லியனை செலுத்துவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன் இதற்காக

ரூபா 2,000,000 முற்பணத் தொகையொன்று அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையினால் பயிற்சிப் பாடநெறிகள் நடாத்தப்படாதிருந்ததுடன் அதற்காக மாணிக்க மற்றும் தங்காபரண ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் தாபிக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை முத்துக்கள் உற்பத்தியாளர் சங்கத்துடன் இணைந்து முத்துக்களை வெட்டுவதல் மற்றும் பட்டைதீட்டுல் தொடர்பான பாடநெறியொன்றை நடாத்தும் பொருட்டு செய்திப்பத்திரிகை விளம்பரமொன்றைப் பிரசுரிப்பதற்காக ரூபா 1,166,704 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

2.2.5 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

---------------------------------------------------------

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டிற்கான ஏற்மதி மேம்பாட்டு, சந்தைப்படுத்தல் திட்டத்தினை வெளிநாட்டு உயர்ஸ்தாணிகர்களிற்கு அறிமுகப்படுத்துவதற்கான ஒன்றுகூடல் வைபவத்திற்காக ரூபா 2,063,008 செலவினமொன்று செய்யப்பட்டிருந்ததுடன் இந் நிகழ்ச்சிக்காக பாதீட்டு மதிப்பீடொன்றைத் தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினையும் பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

(ஆ) நாளாந்த வாகன ஓட்டப்பதிவேடுகள் மீதான தெரிவுப் பரிசோதனைகளில் 4 வாகனங்கள் தொடர்பில் வாகன ஓட்டத்தின் அடுத்துவரும் நாளில் காணப்பட வேண்டிய எரிபொருளின் அளவு ரூபா 36,385 பெறுமதியான 466.04 லீற்றர்களால் குறைத்துப் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் 3 வாகனங்கள் தொடர்பில் ரிெபொருள் கொள்கலனின் இயலளவை மிஞ்சி 310.5 லீற்றர் எரிபொருள் நிரப்பவதற்காக ரூபா 23,960 செலவிடப்பட்டிருந்தது.

(இ) MF6/1/1/96 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் 2.2.1(iv) ஆம் பந்தியின் படி தங்குமிட மற்றும் இணைந்த படிகளைப் பெற்றுக் கொள்கையில் அந்தந்த உத்தியோகத்தர்களிற்கு உரித்தான தெரிவு வீத அடிப்படை/திரட்டிய வீத அடிப்படையினைக் காட்டிலும் மிகையாக பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் பயணத்தின் பின்னர் தீர்வுசெய்யப்பட்டிருந்த தொகையினையும் கருத்திற்கொண்ட பின்னர் அவ்வாறு மிகையாகப் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த தொகையில் 4 உத்தியோகத்தர்களிடமிருந்து அதிகாரசபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த தொகை அமெரிக்க டொலர் 1391.9 ஆகும்.

(ஈ) மேற்படி (ஹை) இல் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் தங்குமிட மற்றும் இணைந்த படிகளிற்கு மேலதிகமாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது 5 உத்தியோகத்தர்களிற்காக அவசரச் செலவினமாக 4000

டொலர்கள் திறைசேரியின் அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்ததுடன் இத் தொகையிலிருந்து நாளாந்தச் செலவினமாக செய்யப்பட வேண்டிய தொலைபேசிச் சிட்டைகள் மற்றும் டெக்சி கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய தொகையான அமெரிக்க டொலர் 1765.5 அதிகாரசபைக்கு மீளளிக்கப்பட்டிருந்தது.

### 2.2.6 பயன்படுத்தாத மற்றும் குறைப்பயன்பாடு கொண்ட சொத்துக்கள்

---

பின்வரும் பயன்படுத்தாத மற்றும் குறைப்பயன்பாடு கொண்ட சொத்துக்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூடிய வாடகை வருமானத்தினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் 2006 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மொணராகலைக் கட்டடிடத்தின் 2010 திசெம்பர் 31 இல் பெறுமதி ரூபா 15,461,013 ஆகும். இக் கட்டிடத்திற்கான வருடாந்த பெறுமானத்தேய்வு ஏற்பாடு ரூபா 309,220 இலாபத்திற்கெதிராக பதிவழிக்கப்படுவதுடன் இதனை பிராந்திய அலுவலகத்தினை நடாத்திச்செல்வதற்காக அன்றி வேறு பயனுள்ள நடவடிக்கைகளிற்காக பயன்படுத்திக் கொண்டிருக்கவில்லை.

(ஆ) இரத்தினபுரி புதிய நகரத்தில் ரூபா 26,127,617 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் அரசாங்கத்தின் வேண்டுகோளிற்கமைய சப்ரகமுவை மாகாண சபைக்கு கையளிக்கப்பட்டதாக தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபையினால் இக்கட்டிடத்திற்காக வருடாந்த பெறுமானத்தேய்வாக ரூபா 522,552 வருமானத்திற்கெதிராக பதிவழிக்கப்பட்டு வருகிறது.

(இ) 2010 திசெம்பர் 31 இல் ரூபா 5,358,501 பெறுமதியான பெலிதெனிய கட்டிடம் எவ்வித பயனுள்ள பணிகளிற்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இக் கட்டடிடத்தினை பணம் அறவிடாது பயிற்சிப் பாடநெறிகளை நடாத்திச் செல்வதற்காக 2010 ஜனவரி 05 ஆந் திகதி தொடக்கம் தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கு வழங்குவதற்காக உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்த போதிலும் 2010 செப்தம்பர் 01 ஆந் திகதி வரை எப் பாடநெறிகளும் நடாத்தப்படாதிருந்துடன் கட்டிட வளவு காடுகளினால் சூழப்பட்டிருந்தமை பௌதீகக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதரிக்கப்பட்டது. 2011 மே 13 ஆந் திகதிய தலைவரின் பதிலளிப்பின் படி மாணிக்கக் கற்களை வெட்டுவதற்கும் பட்டைதீட்டுவதற்கும் 30 பேர்கள் பயிற்சி பெற்று வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மாத்தரை பிராந்திய அலுவலகத்தில் சேவையாற்றி வரும் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் அலுவலகத்திற்குத் தேவையான இட வசதியின் அளவு என்பவை தொடர்பில் உறுதியான தீர்மானமொன்றிற்கு வராது ரூபா 28,000 மாத

வாடகைக்கு இரண்டு மாடிக் கட்டிடமொன்று வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் அதன் முதலாம் மாடி முழுமையாகவும் கீழ் மாடியின் அறையொன்றும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) உலக வாத்தக் மையத்தில் 09 வியாபாரக் கூடங்கள் வாடகைக்கு வழங்கப்படாது காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் அதன் மூலம் அதிகாரசபைக்கு ஏற்பட்டிருந்த இழப்பு ரூபா 7,441,649 ஆகும்.

(ஊ) நிலையான சொத்துக்களின் கீழ் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகள் (working Progress) தொடர்பாக 2001 தொடக்கம் 2005 வரையிலான காலப்பகுதியில் ரூபா 1,475,441 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் ஏதேனும் பயனுள்ள முன்னேற்றகரமான பணிகள் கடந்த 5 வருட காலத்தினுள் செய்யப்படாதிருந்ததுடன் குறித்த செயற்திட்டப் பணிகள் கைவிடப்பட்டிருந்தன.

### 2.2.7 ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரசபையின் வளங்கள்

---

நிதி திட்டமிடல் அமைச்சினால் 1997 ஜனவரி 24 ஆந் திகதி வெளியிடப்பட்ட 116 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி அரசாங்க முயற்சிகளிற்கு சொந்தமான வளங்கள் அமைச்சுக்களினால் பயன்படுத்தப்படக் கூடாதெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபைக்குச் சொந்தமான 03 வாகனங்களிற்காக ரூபா 539,117 உம் வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்திற்காக ரூபா 748,194 உம் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த 4 ஊழியர்களிற்கான சம்பளம், மேலதிநேர மற்றும் உபகாரப் படிகளிற்காக ரூபா 341,277 உம் செலுத்தப்பட்டிருந்தன.

### 2.2.8 இணங்காணப்பட்ட இழப்புக்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த பெலிதெனிய கட்டிடத்திற்கான ரூபா 6,655 நீர்க் கட்டணம் மற்றும் மின்சாரக் கட்டணங்களைச் செலுத்தாமையால் குறித்த நீர் மற்றும் மின்சாரத் தொடர்புகளை மீளப் பெற்றுக் கொள்வதற்காக முறையே ரூபா 11,760 மற்றும் ரூபா 43,375 செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 2011 ஆம் ஆண்டிற்கான ஏற்மதி மேம்பாட்டு, சந்தைப்படுத்தல் திட்டத்தினை வெளிநாட்டு உயர்ஸ்தாணிகர்களிற்கு அறிமுகப்படுத்துவதற்கான ஒன்றுகூடல் வைபவத்திற்காக ரூபா 72,100 இற்கு 300 அழைப்பிதல்கள் அச்சிடப்பட்டிருந்ததுடன் 188 பேர்களிற்கு மாத்திரம் அழைப்பதல்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. ரூபா 26,317 பெறுமதியான 112 அழைப்பிதல்கள் மிகையாக அச்சிடப்பட்டிருந்தன.

(இ) வர்த்தகக் கண்காட்சிக்கு Hoarding Diamond செய்வதற்காக தனியார் நிறுவனமொன்றிடமிருந்து 54 ஸ்பொட் மின்குமிழ்களும் 18 ஹெலஜன் மின்குமிழ்களும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் பௌதீகப் பரிசோதனைகளில் ரூபா 26,500 பெறுமதியான 02 ஹெலஜன் மின்குமிழ்களும் 01 பிரகட் டைம் பற்றாக்குறையாக காணப்பட்டன. கோள்வனவு செய்யப்பட்டிருந்த இவ் உபகரணங்கள் பொருட் பதிவேட்டிற்கும் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2011 ஜுன் 02 ஆந் திகதி மேற்படி ரூபா 369,000 பெறுமதியான 27 ஸ்பொட் மின்குமிழ்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை குறித்த காலத்தில் செலுத்தாமை காரணமாக 50% ஆகிய ரூபா 10,350 தண்டப்பணத் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 2010 ஒக்தோபர் 9 - 15 வரையான காலத்தில் இஸ்ரேலில் நடாத்துவதற்கு தீர்மானமாகியிருந்த Hall Marking Convention கூட்டத்திற்கு பங்குபற்றுவதற்காக விமானச் சீட்டு மற்றும் வீசா பெற்றுக் கொள்வதற்காக ரூபா 107,570 செலவிடப்பட்டிருந்த போதிலும் குறித்த கூட்டத்தில் பங்குபற்றியிருக்கவில்லை.

### 2.2.9 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அதிகாரசபைக்கான அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையினை நிலையான பதவிகளிற்காக சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் வெற்றிடங்கள் நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது.

| **வகை** | **2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | |
|---|---|---|---|
| | அங்கீகரித்த எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடமான எண்ணிக்கை |
| பதவிநிலை | 54 | 30 | 24 |
| பதவிநிலையற்ற | 167 | 95 | 72 |

| | | | |
|---|---|---|---|
| ஆரம்பகட்ட | 51 | 41 | 10 |
| ஓப்பந்த | - | 45 | - |
| சமயாசமய | - | 35 | - |
| தற்காலிக மற்றும் ஏனைய | - | 04 | - |
| | ---------------- | ------------------ | --------------- |
| | 272 | 250 | 106 |
| | ====== | ====== | ====== |

(ஆ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1(iv) மற்றும் (vii) ஆம் பந்திகளின் பிரகாரம் வெற்றிடமான பதவிகளிற்கு பதிற்கடமை/பணிகளை மேற்கொள்ளும் நியமணங்கள் 03 மாதங்களிற்கு மேற்படாதிருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருக்கையிலும் வெற்றிடமான பதவிகளிற்காக அதிகாரசபையினால் நிலையான நியமணங்கள் வழங்கப்படாது 04 தொடக்கம் 12 மாதங்கள் வரையான காலத்திற்கு பதிற்கடமை/பணிகளை மேற்கொள்ளும் நியமணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் 12 பதவிகளிற்காக செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 593,184 ஆனதுடன் முன்னைய ஆண்டில் 09 பதவிகளிற்காக ரூபா 727,105 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்காக ஒப்பந்த, தற்காலிக மற்றும் சமயாசமய என்ற அடிப்படையில் 84 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த 30 ஊழியர்களிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.3.1(viii) ஆம் பந்தியின் படி முகாமைத்துவப் பதவியொன்றில் ஏற்படும் வெற்றிட நிரப்புகை பதில்வைப்பு திட்டமொன்றின் (Succession Plan) படி மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்திடம் அவ்வாறான திட்டமொன்று இல்லாமையால் வெற்றிடமாகும் பதவிகளிற்கு நிலையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்ய முடியாது போயிருந்தது.

(உ) ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த உத்தியோகத்தர்களை 6.ஂ.2006 இன் சுற்றறிக்கைக்கு முரணாக அடிப்படைச் சம்பள அளவுத்திட்டத்தில் வைக்காது கூடிய சம்பள அளவுத் திட்டத்தில் வைத்திருந்தமையால் 15 உத்தியோகத்தர்களிற்கு (இணங்காணப்பட்ட) ரூபா 156,400 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) அங்கீகரித்த பதவியணியில் இல்லாத பதவியொன்றான செயற்பாட்டுப் பணிப்பாளர் பதவிக்காக 2010 மே 31 ஆந் திகதி தொடக்கம் பனிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டிருந்த உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவர் முழநேரச் சேவையில் ஈடுபடாதிருக்கையிலும் அவரிற்கு முழுநேர நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒருவரிற்கு மாதாந்தம் செலுத்தப்படுகின்ற ரூபா 20,000 படியும் மாதாந்த எரிபொருள் படியும் அடங்கலாக ரூபா 216,650 செலுத்தப்பட்டிருந்தது.

## 2.2.10 கூட்டுத் திட்டம்

---------------------------

2006 – 2010 கூட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த மானிக்க மற்றும் தங்காபரணத் தொழில் அபிவிருத்திக்கான குறித்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அதிகாரசபை தவறியிருந்தமையால் அந்த இலக்குகளும் 2009 – 2013 கூட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. 2009 – 2013 கூட்டுத் திட்டத்தின் படி 2010 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை தெளிவாகக் காட்டக்கூடியவாறு வருடாந்தப் பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2.11 பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------------

மதிப்பீட்டு மற்றும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களிற்கிடையே 21% தொடக்கம் 74% வரையிலான குறிப்பிடத்தக்களவு முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

**-----------------------------------------------------------**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) வாடகை செலுத்துகைகள்

(ஆ) பிணைப்பணங்களை மீளளித்தல்

(இ) வாகனப் பயன்பாடு

(ஈ) ஆட்சேர்ப்பு

(உ) இருப்புக் கட்டுப்பாடு

(ஊ) பெறவேண்டிய கணக்குகள்

(எ) முற்பணங்களைச் செலுத்துதல்

(ஏ) நாட்குறிப்புப் பதிவுகளைத் தயாரித்தல்

(ஒ) கொள்வனவு நடைமுறைகள்